மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் 23.6.2016 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநரின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு அளித்த பதிலுரை:

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த மாமன்றத்திலே மேதகு ஆளுநர் அவர்கள் **16.6.2016** அன்று ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் திரு செ.செம்மலை அவர்களால் முன்மொழியப்பட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு.தங்கத்தமிழ்ச் செல்வன் அவர்களால் வழிமொழியப்பட்ட தீர்மானத்தின் மீதான விவாதத்தில் அனைத்துக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளை தெரிவித்து இருக்கிறார்கள். அனைவருக்கும் எனது நன்றியினை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கருத்துகளுக்கான எனது பதிலுரையை அளிக்க விழைகிறேன்.

"மக்கள் சக்தியை மட்டும் மூலதனமாகக் கொண்ட, இயக்கங்கள் மட்டுமே இன்று உருக்குலையாமல், துருப் பிடிக்காமல் தேய்ந்து விடாமல், மாய்ந்து விடாமல், அசைக்க ஒண்ணாத கோட்டைக் கொத்தளமாக புத்தொளி வீசுகிறது" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கூற்றுப்படி, கடந்த ஐந்து ஆண்டு காலமாக மக்கள் சக்தியை மூலதனமாகக் கொண்டு நாங்கள் ஆட்சி பொறுப்பிலே இருந்தோம். அதனால் தான், மக்கள் என்னை தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சராக ஆக்கி இருக்கிறார்கள். தொடர்ந்து மக்களுக்கு சேவை செய்ய எங்களை அனுமதித்து இருக்கிறார்கள். அதற்காக தமிழக மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

கடந்த **23.1.2016** அன்று மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு, நான் பதிலுரை அளித்த போது நல்ல ஆட்சியின் இலக்கணம் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நினைவு கூர்ந்தேன்.

"நல்ல விளக்குக்கு வெளிச்சம் எப்படியோ, நல்ல வயலுக்கு விளைச்சல் எப்படியோ, அப்படித்தான் நல்ல மக்களுக்கு, நிம்மதி வேண்டும்" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

மக்கள் நிம்மதியுடன் வாழ வகை செய்யும் விதமாக பல்வேறு திட்டங்களை நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருப்பதை அறிவார்ந்த தமிழக மக்கள் உணர்ந்துள்ளார்கள் என்று நான் அப்போது தெரிவித்தேன். அவ்வாறு மக்கள் நிம்மதி பெறும் வகையிலான திட்டங்களை நாங்கள் செயல்படுத்தி வந்ததால் தான், தமிழக மக்கள் எங்களை மீண்டும் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தி இருக்கிறார்கள். அந்த மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையிலான கொள்கைகளைத் தான் ஆளுநர் உரையில், குறிப்பிட்டு இருக்கிறோம்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு.க.ஸ்டாலின், "இந்த ஆளுநர் உரையைப் பொறுத்த வரையில், இது அரசின் உரை தான் என்பது வெளிப்படுகிறது" என்று ஆளுநர் உரை முடிந்தவுடன் தனது முதல் கருத்தாக தெரிவித்தார். ஆளுநர் உரை என்பது அரசின் உரை தான். அரசின் கொள்கைகளை எடுத்துக் கூறும் விளக்க உரை தான். இது தான் ஆளுநர் உரையின் இலக்கணம் என்பதை முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியும் இதே சட்டமன்றத்தில் கூறி இருக்கிறார் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் தெரிந்து கொள்வது நல்லது.

**1997** ஆம் ஆண்டு ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதில் அளித்து பேசிய போது, "கவர்னர் உரை என்பது அந்த உரையை யார் ஆற்றுகிறார்களோ, அவர்களுடைய உரை அல்ல. இது அரசாங்கத்தினுடைய கொள்கை விளக்க ஏடு" என்று திரு. கருணாநிதி அவர்களே சொல்லியுள்ளார். எனவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு இதில் எந்தவித குழப்பமும் வேண்டியதில்லை என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திமுக தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு.மு.கருணாநிதி அவர்கள், "கொள்கைக் குறிப்புகள், எதுவும் இல்லாத, வெற்றறிக்கை" என்று கூறியிருக்கிறார். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், "இந்த அரசு என்னவெல்லாம் ஆசைப்படுகிறதோ, அதை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அவற்றையெல்லாம் எப்படி நிறைவேற்றுவது என்பது குறித்து எந்த விவரமும் எந்தவித விளக்கமும் அதில் இடம் பெற்றிருக்கவில்லை'' என்று சொல்லியுள்ளார். எனவே, கொள்கை அறிவிப்புகள் இருக்கின்றன என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஒப்புக் கொண்டுள்ளார். கவர்னர் உரை என்பது அரசின் கொள்கையை எடுத்துக் கூறும் உரை ஆகும்.

1967 ஆம் ஆண்டிலே, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக பதவியேற்ற பிறகு ஆளுநர் உரைக்கு, நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதில் அளித்து பேசிய போது, தெரிவித்த கருத்துகளை இங்கு சுட்டிக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

''கவர்னர் உரை என்பது இந்த சர்க்கார் செய்ய வேண்டிய காரியங்களையும் தொகுத்து வெளியிடுகின்ற, பெரிய அறிக்கை அல்ல. கோடிட்டு காட்டுகிற அறிக்கை. ……. கவர்னர் உரையில்கோடிட்டு காட்டியிருப்பதை வைத்துக் கொண்டு அதிலிருந்து நாம் மற்றவற்றை யூகித்துக் கொள்ள வேண்டும். 'வெற்றிலை பாக்குப் போடுகிறீர்களா?' என்று கேட்டால், சுண்ணாம்பு தடவாமல் போட்டுக் கொள்ள வேண்டும் என்பது அர்த்தமல்ல. "வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு போடுகிறீர்களா?" என்று யாரும் கேட்பதில்லை. "வெற்றிலை பாக்குப் போடுகிறீர்களா?" என்று தான் கேட்பார்கள். "போட்டுக் கொள்கிறேன்" என்பார்கள். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, மூன்றும் தான் வரும். வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவி போட்டுக் கொள்வார்கள். வெற்றிலை பாக்குத் தானே போட்டுக் கொள்ளச் சொன்னார்கள்? இதோ வெற்றிலை, இதோ பாக்கு, சுண்ணாம்பு வேண்டாம் என்று யாரும் தள்ளிவிட மாட்டார்கள். அது போல் கவர்னர் உரையில் இது இல்லை, அது இல்லை, ஆகவே இதில் எதுவும் இல்லை என்று தள்ளி விடலாமா? கவர்னர் உரையில் சில குறிப்பிட்ட விஷயங்கள் இருக்கும். அதோடு தொடர்பாக நாம் தான் மற்ற விஷயங்களை யூகித்துக் கொள்ள வேண்டும்" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

பேரறிஞர் அண்ணா சொன்னதை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், பெரும்பான்மையான மக்களின் வாழ்வாதாரமாகவும் விளங்கும் முதன்மைத் துறையான வேளாண் துறைக்கு கடந்த 5 ஆண்டுகளில் அளித்த முக்கியத்துவத்தைப் போன்றே மிகுந்த முக்கியத்துவத்தை எனது தலைமையிலான அரசு தொடர்ந்து அளிக்கும். வேளாண் துறைக்கும், விவசாயிகளின் வருவாய் அதிகரிப்பதற்கும் என பல்வேறு நடவடிக்கைகளை எடுத்ததன் காரணமாகவே 2015-16 ஆம் ஆண்டு உணவு தானிய உற்பத்தி 1 கோடியே, 23 லட்சத்து, 47 ஆயிரம் மெட்ரிக் டன் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2010–11 ஆம் ஆண்டில் அன்றைய திமுக ஆட்சியில் உணவு தானிய உற்பத்தி 75.95 லட்சம் மெட்ரிக் டன் என்ற அளவிலிலேயே இருந்தது. அதாவது, உணவு தானிய உற்பத்தி எங்கள் ஆட்சிக் காலத்தில் 63 சதவீதம் அதிகரித்துள்ளது.

உணவு தானிய உற்பத்தியில் கடும் வறட்சி நிலவிய 2012-2013–ஆம் ஆண்டை தவிர ஏனைய ஒவ்வொரு ஆண்டும், உயரிய சாதனைகளை எனது தலைமையிலான அரசு படைத்து வந்துள்ளது.

சாகுபடி பரப்பை அதிகரித்தல், விவசாயத்தில் புதிய உத்திகளைக் கையாளுதல், தரமான விதைகள், இதர இடுபொருட்கள் வழங்குதல் என பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டதன் காரணமாகவே இவ்வாறு உணவு தானிய உற்பத்தி ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துள்ளது.

உரங்கள் மற்றும் வேளாண் கருவிகளுக்கு மதிப்புக் கூட்டு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைப்பதற்கு வழி வகை செய்யும் வகையில் உரங்கள் வாங்கி, விற்பனை செய்ய ஏதுவாக TANFED நிறுவனத்திற்கு வட்டியில்லா முன் பணம் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழகம் எப்போதும், தண்ணீர் பற்றாக் குறை உள்ள மாநிலம் என்பதால் நுண்ணீர்ப் பாசன திட்டங்களுக்கு எனது அரசு மிகுந்த முக்கியத்துவத்தை அளித்து வருகிறது. நுண்ணீர்ப் பாசன அமைப்பை ஏற்படுத்தும் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும், கடந்த 5 ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது.

குறைந்த வட்டியில் விவசாயக் கடன் வழங்கப்படுகிறது. கடந்த 5 ஆண்டுகளில் கூட்டுறவு வங்கிகள் மூலம் 23,214 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படும் பயிர்க் கடனை குறித்த காலத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டி அறவே தள்ளுபடி செய்யப்படுகிறது. இதன்படி, 811 கோடி ரூபாய் அளவிற்கு வட்டி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

விவசாயக் கடன் பெற்ற விவசாயிகளின் கடன் சுமையை, குறைக்கும் வகையில் எங்களது தேர்தல் அறிக்கையில், கொடுத்த வாக்குறுதியின்படி கூட்டுறவு வங்கிகளுக்கு சிறு, குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பயிர்க்கடன் நடுத்தர கால வேளாண்மைக் கடன், மற்றும் பண்ணைச் சார்ந்த நீண்ட காலக் கடன் ஆகிய அனைத்தையும் தள்ளுபடி செய்திட நான் உத்தரவிட்டு அதன் அடிப்படையில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு பயிர்க் கடன். தொடர்ந்து வழங்கப்படுவதுடன், பயிர்க் கடனை குறித்த காலத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டி தள்ளுபடி செய்யும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பொதுப் பணித் துறையின் கீழ் உள்ள 5,693 ஏரிகளில் தூர் வாருதல், கரையைப் பலப்படுத்துதல், நீரியல் கட்டுமானங்களை சீரமைத்தல், போன்ற பணிகள் 2,870 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு அவை புனரமைக்கப்பட்டுள்ளன. 198 ஏரிகளில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. 213 தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. 47 தடுப்பணைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 66 உபவடிநிலங்களில் 4,778 ஏரிகளை சீரமைத்தல் மற்றும் ஆற்றுப் படுகைகளை மேம்படுத்தி 477 புதிய அணைக்கட்டுகள் மற்றும் தடுப்பணைகள் கட்டுதல், போன்ற பணிகள் உலக வங்கி கடன் உதவியுடன் செயல்படுத்தப்படும். இதற்கென, 2,950 கோடி ரூபாய் திட்டத்திற்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வாழ்நாள் முழுவதும் உறுதுணையாக இருக்கும் வகையில் ‘‘முதலமைச்சரின், உழவர் பாதுகாப்பு திட்டம்’’ என்ற திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சிறு, குறு விவசாயிகள், குத்தகைதாரர்கள், விவசாயத் தொழிலாளர்கள் என அனைவருக்கும் இத்திட்டத்தின் கீழ் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், 37 லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு 3,044 கோடி ரூபாய், அளவிற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ‘‘முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம்’’ தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் கால்நடைகள், முக்கியப் பங்கு வகிக்கின்றன. எனவே தான், கால்நடை மேம்பாட்டிற்கும், பால் உற்பத்திக்கும், முக்கியத்துவம் அளித்து அதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த 5 ஆண்டுகளில் 830 புதிய கால்நடை மருந்தகங்கள், 200 கிளை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1,406 புதிய, கால்நடை மருத்துவ நிலையக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1,163, கால்நடை மருத்துவ நிலையக் கட்டடங்கள், புதுப்பிக்கப்பட்டுள்ளன.

ஏழைகளின் வாழ்வாதாரம் பெருகும் வகையிலும், பால் உற்பத்தியை அதிகரிக்கும் வகையிலும், கடந்த 5 ஆண்டுகளில் 60,000 விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 7 லட்சம் ஏழை, எளிய மகளிருக்கு தலா 4 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் விலையில்லாமல் வழங்கப்பட்டுள்ளன. இந்த திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

கடந்த 5 ஆண்டுகளில் நாளொன்றுக்கு 5.35 லட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் உயர்த்தப்பட்டுள்ளது.

பால் குளிர்விக்கும் அறைகளின் திறன் நாளொன்றுக்கு 7.30 லட்சம் லிட்டர் அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. இவை தவிர, நாளொன்றுக்கு 7.30 லட்சம் லிட்டர் அளவுக்கு பால் குளிர்விர்க்கும் அறைகள், பல்வேறு பால்பண்ணைகளில் அமைக்கப்பட்டு வருகின்றன.

திருவண்ணாமலையில் நாள் ஒன்றுக்கு, 20 மெட்ரிக் டன் திறனுள்ள பால் பவுடர் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மீன் வளத்தை, மேம்படுத்துவதற்கும், மீன் வளத் துறையை நவீனப்படுத்துவதற்கும், நவீனத் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி அதன் மூலம் மீனவர்களின் வருவாய் மேம்படச் செய்வதற்கும், பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு, கடந்து 5 வருடங்களில் எடுத்துள்ளது.

நாகப்பட்டினத்தில் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் மற்றும் பொன்னேரி ஆகிய இடங்களில் மீன் வள தொழில்நுட்ப நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மீன்பிடி தடைக் காலம், மீன்பிடி குறைக் காலம், ஆகியவற்றின் போது மீனவர் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. மீனவர்களுக்காக குழுக் காப்பீட்டுத் திட்டத்தில் 50 விழுக்காடு சந்தா தொகையை அரசு செலுத்துகிறது. நாட்டுப் படகுகளில் இயந்திரங்கள் வாங்கிப் பொருத்துவதற்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. மீன்பிடி விசைப் படகுகள் மற்றும் இயந்திரமயம் ஆக்கப்பட்ட நாட்டுப் படகுகளுக்கான டீசலுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. நாட்டுப் படகுகளுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத வகையில் புதுமை திட்டமாக தொலைதூர கடல் பகுதியில் மீன்பிடிக்க ஏதுவாக புதிய சூரை மீன் படகு கட்டுவதற்கு, 30 லட்சம் ரூபாய் வரையிலான 50 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் 35 மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 7 மீன்பிடி துறைமுகங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 14 இடங்களில் மீன்பிடி இறங்கு தளங்களும், 3 மீன்பிடி துறைமுகங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 5 மீன் பதன பூங்காக்கள் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. கடல் அரிப்புச் சுவர்கள் மற்றும் தூண்டில் வளைவுகள் 116 கோடி ரூபாய் செலவில் 37 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இது போன்ற, மீனவர் நலன் காக்கும் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

தமிழ்நாட்டின் பொருளாதாரத்திலும் தொழில் உற்பத்தியிலும் ஜவுளித் தொழில், அதிலும் குறிப்பாக, கைத்தறி, முக்கிய பங்கு வகிக்கிறது. கைத்தறித் துறையை மேம்படுத்தவும், நெசவாளர்கள் வாழ்வு வளம் பெறவும், பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

நெசவாளர்களுக்கென 10,000 சூரிய சக்தியுடன் கூடிய, பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மின் மோட்டார் பொருத்தப்பட்ட 6,000 பெடல் தறிகள், வழங்கப்பட்டுள்ளன. மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரங்கள் 25,000 நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு, மின்சார பாவு சுற்றும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நெசவாளர்கள் தொழில் முதலீடு மற்றும் நடைமுறை மூலதனக் கடன் பெறும் வகையில் நெசவாளர்களுக்கான கடன் அட்டை வழங்கும் திட்டம் 2012–2013 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம், நெசவாளர்கள் 2 லட்சம் ரூபாய் வரை கடன் பெற இயலும். வட்டியில் 3 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

கைத்தறித் துறைக்கும், நெசவாளர்களுக்கும் பல்வேறு முன்னோடித் திட்டங்களை செயல்படுத்திய காரணத்தினால் தான் 1,163 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 946 சங்கங்கள் லாபத்தில் இயங்கி வருகின்றன.

எங்களது தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி, கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு கட்டணமில்லாமல் 100 யூனிட் அளவுக்கு வழங்கப்பட்டு வந்த மின்சாரம் 200 யூனிட்டுகளாகவும் விசைத்தறி நெசவாளர்களுக்கு கட்டணமில்லாமல் 500 யூனிட் அளவுக்கு வழங்கப்பட்டு வந்த மின்சாரம் 750 யூனிட்டுகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

சமுதாயத்தின் விளிம்பில் உள்ள ஏழை எளிய மக்கள், பொருளாதார வளர்ச்சி பெற்று ஏனையோருக்கு இணையாக உயர்வடைய வேண்டும் என்றால் அவர்களின் கல்வி வளர்ச்சியில் கவனம்

செலுத்தப்பட வேண்டும். சிறந்த கல்வி அளிக்கப்பட்டால் தான் பொருளாதார வளர்ச்சி, அடித்தட்டில் உள்ள மக்களையும் சென்றடையும். கல்வியில் ஏற்படும் வளர்ச்சி சமுதாய வளர்ச்சிக் குறியீட்டை நிர்ணயிக்கும், முக்கியக் காரணியாகும். ஒரு சமுதாயம் வளர்ச்சி அடைந்த சமுதாயமாக கருதப்பட வேண்டும் எனில், மனித வளக் குறியீடுகள் வளர்ச்சி அடைய வேண்டும். எனவே தான், கல்வி வளர்ச்சிக்கு எனது தலைமையிலான அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது.

அனைவருக்கும், தரமான கல்வி வழங்கிட வேண்டுமெனில் பள்ளிகளின் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட வேண்டும். போதிய ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். மாணவ மாணவியரின் இடைநிற்றலை குறைத்திட வேண்டும். மாணாக்கர்களின் கற்கும் திறன் உயர்த்தப்பட வேண்டும். இவையெல்லாம் நிறைவேற்றிட வேண்டும் என்ற காரணத்தால் தான் பல புதிய திட்டங்களை எனது தலைமையிலான அரசு கடந்த 5 ஆண்டுகளாக செயல்படுத்தி வருகிறது.

மாணவ மாணவியருக்கு 4 இணைச் சீருடை, விலையில்லா பாட நூல்கள், விலையில்லா நோட்டுப் புத்தகங்கள், விலையில்லா புத்தகப் பை, கணித உபகரணப் பெட்டிகள், கிரையான்ஸ், நில வரைபட புத்தகம், ஆகிய கல்வி உபகரணங்கள், ஓர் இணைக் காலணிகள், விலையில்லா மிதி வண்டிகள், கட்டணமில்லாப் பேருந்து பயணச் சலுகை, சத்தான மதிய உணவு, ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், மேல்நிலைப் பள்ளி மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு மொத்தம் 5,000 ரூபாய் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதன் காரணமாக 2010-11 ஆம் ஆண்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலிருந்து 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய மாணாக்கர்களின் எண்ணிக்கை 5,11,090 என இருந்த நிலையில் இந்த ஆண்டு இது, 5,46,233 என உயர்ந்துள்ளது.

தொடக்கக் கல்வியில், 2010-2011-ஆம் ஆண்டில் 99.60 ஆக இருந்த நிகர சேர்க்கை விகிதம், **2015-16**-ல் 99.85 ஆக உயர்ந்துள்ளது. அதே போன்று, நடுநிலை வகுப்புகளில் 2010-11 ஆம் ஆண்டில் 98.84 என இருந்த நிகர சேர்க்கை விகிதம் **2015-2016**-ஆம் ஆண்டில் 99.11 என உயர்ந்துள்ளது. அதே போன்று இடை நிலைக் கல்வியில் 2010-2011-ல் 82.30 ஆக இருந்த மொத்த சேர்க்கை விகிதம் **2015-16**-ல் 93.15 ஆக உயர்ந்துள்ளது. மேல்நிலைக் கல்வியில் 2010-11-ல் 55.92 ஆக இருந்த மொத்த சேர்க்கை விகிதம் **2015-16**–ல், 77.64 ஆக உயர்ந்துள்ளது. அதே போன்று, இடைநிலை அளவில் 2010-11-ல் 11.21 ஆக இருந்த இடைநிற்றல் விகிதம் **2015-2016**–ல் 3.76 என கணிசமாக குறைந்துள்ளது.

பள்ளிக் கல்விக்கென எனது தலைமையிலான அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் முன்னோடித் திட்டங்கள் அனைத்தும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

பள்ளிக் கல்விக்கு, அளித்து வரும் அதே அளவு முக்கியத்துவத்தை உயர்கல்விக்கும் எனது தலைமையிலான அரசு அளித்து வருகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் 15 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 24 பல்கலைக் கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 11 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 4 அரசு பொறியியல் கல்லூரிகள் என 54 புதிய கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன. இவையன்றி, ஸ்ரீரங்கத்தில் இந்திய தகவல் தொழில்நுட்ப பயிலகம் மற்றும் தேசிய சட்டப்பள்ளி ஆகியவை துவக்கப்பட்டுள்ளன. எனவே தான், உயர் கல்வியில் மொத்த மாணவர் சேர்க்கை இந்திய அளவில் 23.6 சதவீதம் என உள்ள நிலையில் தமிழ்நாட்டில் இது, 44.8 சதவீதம் என உள்ளது. மாணவர் சேர்க்கையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு, முதன்மை மாநிலமாக விளங்குகிறது.

உயர்கல்விக்கு உயரிய முக்கியத்துவத்தை எனது அரசு தொடர்ந்து அளிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மனித வள மேம்பாட்டில் முக்கியப் பங்கு வகிப்பது மக்களின் உடல் நலன் ஆகும். மக்கள் நல்ல உடல்நலன் பெற்று நல்வாழ்வு அமையப் பெற்றால் தான் சிறந்த வளர்ச்சியை நாம் எய்த இயலும். எனவே தான், மக்கள் நல்வாழ்வுக்கு உரிய முக்கியத்துவத்தை எனது தலைமையிலான அரசு அளித்து வருகிறது. ஏழை மக்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டாலும், அதன் முழுப் பயனும் அவர்களைச் சென்றடைய வேண்டுமெனில், சிறந்த உடல்நலன் பேணுவதற்கான வசதிகள் செய்து தரப்பட வேண்டும். உடல்நலக் குறைவு காரணமாக பணி செய்ய இயலாத நிலையை தவிர்க்க ஏழைகளுக்கும், தரமான மருத்துவ வசதிகள், செய்து தரப்பட வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு தான் 2011 ஆம் ஆண்டு நான் ஆட்சி பொறுப்பேற்ற உடனே ஒரு புதிய விரிவாக்கப்பட்ட காப்பீட்டுத் திட்டம் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்திற்கு, 4 ஆண்டுகளில் 4 லட்சம் ரூபாய் வரை தனியார் மருத்துவமனைகளிலும் அரசு மருத்துவ மனைகளிலும் சிகிச்சை பெற இயலும்.

கருவுற்ற ஏழை தாய்மார்களுக்கு ஏற்படும் வருமான இழப்பை ஈடு செய்யும் வகையிலும், கர்ப்ப காலத்தில் தேவைப்படும் சத்தான உணவை உட்கொள்ளும் வகையிலும் அரசு மருத்துவமனைகளில் குழந்தையை ஈன்றெடுக்கும் வகையிலும், தடுப்பூசிகள் போடப்பட்டு குழந்தைகள் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதை உறுதி செய்யும் வகையிலும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

பெண்களின் சுகாதாரத்தை பேணும் நோக்கத்துடன் கிராமப்புற வளர் இளம் பெண்களுக்கு விலையில்லா சானிடரி நாப்கின்கள் வழங்கப்படுகின்றன.

கிராமப் பகுதிகளில் வாழும் அனைத்து மக்களும் தரமான மருத்துவ வசதி பெற வேண்டும் என்ற அடிப்படையில் 187 புதிய, ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 25 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 129 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 15 ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ளன என்ற நிலை எய்தப்படும்.

260 ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்நோயாளிகள் பிரிவு, புற நோயாளிகள் பிரிவு, அறுவை அரங்கம், பிரசவ அறை போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்களை விரைந்து நிரப்பும் வகையில், இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத வகையில், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மருத்துவ கல்லூரி இல்லாத மாவட்ட தலைமை மருத்துவமனைகள், மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு இணையாக, தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு 16 அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தை நலப் பரிசு பெட்டகம் வழங்கப்பட்டு வருகிறது.

கருவுற்ற தாய்மார்களுக்கு அவர்கள் உடல்நலத்தைப் பேணும் வகையில் அம்மா மகப்பேறு சஞ்சீவி வழங்கப்படுகிறது.

மக்கள் உடல்நலன் காக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுவதன் காரணமாகத் தான் அன்றைய தி.மு.க ஆட்சியில் 2010–ஆம் ஆண்டு 1,000 குழந்தை பிறப்புகளுக்கு 24 என இருந்த குழந்தை இறப்பு விகிதம், தற்போது 21 ஆக குறைந்துள்ளது. 2010–ஆம் ஆண்டு, 27 என இருந்த, 5 வயதுக்குட்பட்ட குழந்தை இறப்பு விகிதம் 23 என குறைந்துள்ளது. 2010-ஆம் ஆண்டு தாய் இறப்பு விகிதம் 1 லட்சம் உயிருள்ள பிறப்புகளுக்கு 79 என இருந்தது, தற்போது 67 ஆக குறைந்துள்ளது. இந்த நல்வாழ்வுக் குறியீடுகள், இன்னும் மேன்மையடைய நடவடிக்கைகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

நகர்புற பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு உயரிய சுகாதார வசதிகள் வழங்கும் கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்தும் நோக்கத்துடன், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை கடன் உதவியுடன் தமிழ்நாடு நகர்புற மருத்துவக் கட்டமைப்பு திட்டம் 1,634 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டு முதல் 17 நகரங்களில் உள்ள 21 அரசு மருத்துவமனைகளில் செயல்படுத்தப்படும்.

பல்வேறு நோய்களுக்கும் அறுவை சிகிச்சைகளுக்கும் ரத்தம் இன்றியமையாததாகும். தமிழ்நாட்டில் 288 ரத்த வங்கிகளும், 434 ரத்த சேமிப்பு மையங்களும் செயல்பட்டு வருகின்றன. ரத்த வங்கிகள் மற்றும் அதனைச் சார்ந்த சேவைகளை மேம்படுத்த, சென்னையில் மெட்ரோ ரத்த வங்கி என்ற ஒப்புயர்வு மையத்தை 202 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவி செயல்படுத்த எனது தலைமையிலான அரசு மத்திய அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. இது போன்ற மையம் இந்தியாவிலேயே, புதுடில்லி மற்றும் சென்னை ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே அமைய உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்குவதும், பொருளாதார மேம்பாட்டுக்கும், தொழில் வளர்ச்சிக்கும், ஏற்ற சூழலை அளிப்பதும், அடிப்படை வசதிகளை அனைவரும் பெறுவதற்கும், இன்றியமையாததாக விளங்குவது உட்கட்டமைப்பு வசதிகள் ஆகும். உட்கட்டமைப்பு வசதிகளை நகரங்கள் மற்றும் ஊரகப் பகுதிகளில் ஏற்படுத்த பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு கடந்த 5 ஆண்டுகளில், செயல்படுத்தியுள்ளது. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

நெடுஞ்சாலைத் துறை மூலம் பல்வேறு திட்டங்களின் கீழ் 211.44 கோடி ரூபாய் செலவில் 68.11 கி.மீ. நீளமுள்ள 13 புறவழிச் சாலைகள் புதியதாக அமைக்கப்பட்டுள்ளன. 19,190.52 கோடி ரூபாய் செலவில் 46,890.50 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 1,793 பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள் 3,067.30 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன. மேலும், 10,298 கோடி ரூபாய் செலவிலான பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன.

புதிய சாலைகளை அமைத்தல், சாலைகளை அகலப்படுத்துதல், புறவழிச் சாலைகளை அமைத்தல், ரயில்வே மேம்பாலங்கள், பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள் அமைத்தல் ஆகிய திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் 3,989 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 4,492 கி.மீ. சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 3,390 கி.மீ. பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் உள்ள இதர நகராட்சிகளில் குடிநீர் விநியோகம், பாதாளச் சாக்கடை திட்டம், சாலைகள், மழைநீர் வடிகால், திடக் கழிவு மேலாண்மை ஆகியவற்றிற்கான 9,619 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 24,231 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதே போன்று பேரூராட்சிகளில் 3,625 கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 20,751 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 8,943 கோடியே 83 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல் மற்றும் பாதாளச் சாக்கடை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. அதே போன்று, சென்னை பெருநகரப் பகுதியில் 4,987 கோடியே 11 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 60 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனைத்துக் குடியிருப்புகளுக்கும் தேவையான அளவு குடிநீர் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

குக்கிராமங்களை வளர்ச்சி அலகாகக் கொண்ட 'தாய் திட்டம்' செயல்படுத்தப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள், சாலைகள், சுடுகாடு/இடுகாடு, சுடுகாடு/இடுகாட்டிற்கு சாலை வசதிகள், ஆகியவை குறைந்தபட்ச அடிப்படை தேவைகள் என வரையறுக்கப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மொத்தமுள்ள 79,394 குக்கிராமங்களில் இந்த வசதிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. அங்கன்வாடி மையம், கதிரடிக்கும் களம், விளையாட்டு மைதானம், போன்ற இதர பணிகளும் குக்கிராமங்களில் செயல்படுத்தப்படும்.

கடந்த 5 ஆண்டுகளில் 16,320 துப்பரவு பணியாளர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. 17,638 மூன்று சக்கர மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 9,000 ஊராட்சிகளில் தூய்மைக் காவலர்கள் நியமிக்கப்பட்டு, திடக் கழிவு மேலாண்மை திட்டம், செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டங்கள், விரிவுபடுத்தப்பட்டு அனைத்து கிராமங்களும் தூய்மை கிராமங்களாக ஆக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற, சட்டமன்ற பொதுத் தேர்தலின் போது, இருண்ட தமிழகம் ஒளிமயமாக்கப்படும் என்ற வாக்குறுதியை நான் அளித்திருந்தேன். அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டு தமிழகம் ஒளிமயமாக்கப்பட்டுள்ளது.

இன்று மின் வெட்டு என்ற பேச்சுக்கே இடமில்லை. வீட்டு மின் உபயோகிப்பாளர்கள், விவசாயிகள், நெசவாளர்கள், சிறு தொழில் நிறுவனங்கள், பெரும் தொழில் நிறுவனங்கள், அதிக அளவு மின்சாரம் தேவைப்படும் பெரிய தொழிற்சாலைகள், வணிக இடங்கள், என அனைவருக்கும் எவ்வித தங்கு தடையின்றி தரமான மின்சாரம், வழங்கப்பட்டு வருகிறது. 2015 ஜுன் மாதம் முதல் மின்வெட்டு என்ற பேச்சுக்கே இடமில்லாமல் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் மிக கடுமையான மின் கட்டுப்பாட்டு முறைகளை அப்போதைய திமுக அரசு கொண்டு வந்தது. உயர் அழுத்த தொழிற்சாலைகள் மற்றும் வணிக மின் பயனீட்டாளர்களுக்கு 40 விழுக்காடு மின்வெட்டு இவர்களுக்கு மாலை 6 மணி முதல் 10 மணி வரை 95 சதவீதம் மின்வெட்டு குறைவழுத்த தொழிற்சாலைகள் மற்றும் வணிக மின் பயனீட்டாளர்களுக்கு 20 விழுக்காடு மின்வெட்டு, இவர்களுக்கு மாலை 6 மணி முதல் 10 மணி வரை 95 சதவீதம் மின்வெட்டு, பொது மக்களுக்கு நினைத்த நேரத்தில் எல்லாம் மின் வெட்டு என்ற நிலை ஏற்பட்டது.

2011 ஆம் ஆண்டு மீண்டும் எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின் பல்வேறு மின் திட்டப் பணிகளை விரைந்து முடித்ததோடு, வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரம் வாங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரம் கொண்டு வரப்பட வேண்டும் என்றால் அதற்கான மின்வழித் தடம், வேண்டும். வட மாநிலங்களிலுள்ள மின்சாரத்தை இங்கே பெறுவதற்கு வகை செய்யும் விதமாக மின்வழித் தடங்கள் அமைத்திட எனது தலைமையிலான அரசு வலியுறுத்தியதன் காரணமாகவே மகாராஷ்டிரா மாநிலம், சோலாப்பூரிலிருந்து திருவலம் இடையேயும் மற்றும் நரேந்திரா-கோலாப்பூர் இடையே 765 கிலோ வோல்ட் திறன் கொண்ட மின்வழித் தடங்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் நாம் மின்சாரம் பெற முடிகிறது. இங்கே நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் மத்திய அரசு திட்டங்களிலிருந்து நமக்கான பங்கு, நீண்ட கால மற்றும் நடுத்தர கால மின் கொள்முதல் ஒப்பந்தங்களின் மூலம் பெறப்படும் மின்சாரம், சூரிய ஒளி மின்சாரம் ஆகியவற்றின் மூலம் மொத்தம் 8,432.5 மெகாவாட் மின்சாரம் கடந்த 5 ஆண்டுகளில் கூடுதலாக நாம் பெற்று வருகிறோம். 5 ஆண்டு காலத்தில் 8,432.5 மெகாவாட் மின்சாரம் கூடுதலாக பெறப்பட்ட ஒரு வரலாற்று சாதனையை நாங்கள் நிகழ்த்தியுள்ளோம். எனவே தான், 2015 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதல் மின் வெட்டு என்பது அறவே இல்லை என்ற நிலையை நாம் எய்துள்ளோம். எனவே தான், தனியாரால் இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் தமிழகத்தில் தான் விற்பனை செய்யப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடும் 1.6.2016 முதல் நீக்கப்பட்டுள்ளது.

அடுத்த 5 ஆண்டுகளில் 13,000 மெகாவாட் அனல் மின் திறனும், 3,000 மெகாவாட், சூரிய ஒளி மின்திறனும் கொண்ட அலகுகள் கூடுதலாக நிறுவப்பட்டு தமிழ்நாட்டின் மின் உற்பத்தித் திறன், மேலும் அதிகரிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

இந்தியாவில் தொழில் துவங்க ஏற்றதாக உள்ள முதல் மூன்று மாநிலங்களில் தமிழ்நாடு உள்ளது. தொழிலாளர் திறன், உட்கட்டமைப்பு, பொருளாதார சூழ்நிலை, நிர்வாக ஆளுமை, ஆகியவைகளை எல்லாம் கணக்கிட்டுப் பார்க்கும் போது தமிழ்நாடு முன்னணியில் இருப்பதாக பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மொத்த உள் நாட்டு உற்பத்தியில் இந்தியாவிலேயே மகாராஷ்டிராவை அடுத்து இரண்டாவது இடத்தில் தமிழகம் இருக்கிறது. மகாராஷ்டிரா மாநிலம், தமிழகத்தை விட இரண்டு மடங்கு பெரிய மாநிலமாகும். அதற்கு அடுத்த மாநிலமாக தமிழகம் இருப்பது பெரிய சாதனை. தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் தமிழ்நாடு முதல் மாநிலம். தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் எண்ணிக்கையில் தமிழ்நாடு முதல் மாநிலம். புதிய சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகள் பதிவு செய்வதில் தமிழ்நாடு முதல் மாநிலம். தொழில்

துறையில் நிகர மதிப்புக் கூட்டல் படி தமிழ்நாடு மூன்றாம் இடத்தில் உள்ளது. தொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களின் மொத்த வருவாய் மதிப்பில் மூன்றாம் இடத்தில் தமிழகம் உள்ளது. மொத்த ஏற்றுமதியில் மூன்றாம் இடம் என தமிழகம் உள்ளது. வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெறுவதில் தமிழகம் முன்னிலையில் உள்ளது. 2000 ஆம் ஆண்டு முதல், 2011 ஆம் ஆண்டு வரையிலான 11 ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு கிடைத்த, வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் தொகையை விட இரு மடங்கு அளவில் கடந்த 5 ஆண்டுகளில் கிடைத்துள்ளது.

தமிழ்நாட்டில் முதன்முதலாக உலக முதலீட்டாளர் மாநாடு 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடத்தப்பட்டது. இதில், 2,42,160 கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்து இடப்பட்டன. இதில், 54 நிறுவனங்கள் மூலம் 23,258 கோடி ரூபாய் முதலீடுகள் செய்யப்பட்டு பலர் வேலைவாய்ப்புகள் பெற்றுள்ளனர். மற்ற நிறுவனங்கள் நிலம் கையகப்படுத்துவது, நிதி ஆதாரங்களைப் பெறுவது, போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். விரைவிலேயே இவைகளும் தங்கள் தொழில்களை நிறுவ நடவடிக்கைகளை எடுத்து விடும்.

இந்த முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறுவதற்கு முன்பே 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 31,706 கோடி ரூபாய் முதலீட்டுக்கு வகை செய்யயப்பட்டுள்ளது. வழி காட்டும் மையம் மூலம் 57 திட்டங்களில் 6,036 கோடி ரூபாய் ஈர்க்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

கடந்த 5 ஆண்டுகளில் 5,97,395 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துவங்கப்பட்டுள்ளன. இந்த தொழில் நிறுவனங்களில் 1,00,101 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், 2006 முதல் 2011 வரையிலான திமுக ஆட்சியில் முதலீடு செய்யப்பட்டது 15,906 கோடி ரூபாய் மட்டும் தான். அப்போதைய திமுக ஆட்சியின் 5 ஆண்டுகளில் தொடங்கப்பட்ட சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் 1,78,160 தான். கடந்த 5 ஆண்டுகளில் 14 புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு கடந்த 5 ஆண்டுகளில் 470 கோடி ரூபாய் அளவிற்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 1 லட்சத்து 58 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4,059 தொழில் நிறுவனங்கள் தொழில் துவங்க அனுமதி அளித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நதிநீர்ப் பிரச்சனைகளில் எனது தலைமையிலான அரசு உரிய நடவடிக்கைகளை தொடர்ந்து எடுக்கும். முல்லைப் பெரியாறு பிரச்சனையைப் பொறுத்தவரை உச்சநீதிமன்றத்தில் நமக்கு சாதகமான, நியாயமான தீர்ப்பினை பெற்றதன் அடிப்படையில் 35 ஆண்டுகளுக்குப் பிறகு, 21.11.2014 அன்று முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி வரை நீர் தேக்கப்பட்டது. கடந்த ஆண்டும் 142 அடி வரை நீர் தேக்கப்பட்டது.

புதிய முல்லைப் பெரியாறு அணை கட்டுவதற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டை மேற்கொள்ள கேரள அரசுக்கு மத்திய அரசு அளித்திருந்த அனுமதியை எனது தொடர் வற்புறுத்தலினால் மத்திய அரசு நிறுத்தி வைத்து விட்டது.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்த் தேக்க அளவான 152 அடிக்கு நீரைத் தேக்கிட தேவையான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்துள்ளது.

மத்திய நீர்வளக் குழுமத்தின் திருப்திக்கு அணையை வலுப்படுத்திய பின்னர், உச்ச நீதிமன்ற ஆணைப்படி, தனிப்பட்ட வல்லுநர்கள் பரிந்துரையைப் பெற்று, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம், அதன் முழு நீர்த் தேக்க அளவான 152 அடிக்கு உயர்த்தப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

காவேரி நதிநீர்ப் பிரச்சனையில் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை 5.2.2007 அன்று பிறப்பிக்கப்பட்டது. ஆனாலும், திமுக அங்கம் வகித்த முந்தைய காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு

இந்த இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடவில்லை. தொடர்ந்து உச்சநீதிமன்றத்தில் எனது தலைமையிலான அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக மத்திய அரசு 19.2.2013 அன்று மத்திய அரசிதழில் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை வெளியிட்டது. எனினும், இதனை நடைமுறைப்படுத்த தேவையான காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு ஆகியவை முந்தைய காங்கிரஸ் கூட்டணி அரசாலும் அமைக்கப்படவில்லை. தற்போதைய, மத்திய, பாரதிய ஜனதா அரசாலும் அமைக்கப்படவில்லை. இவை அமைக்கப்பட வேண்டும் என நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன்.

8.1.2016 அன்று மத்திய நீர்வள துறை அமைச்சர் தமிழக அரசுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் காவேரி மேலாண்மை வாரியம், மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழுவை அமைப்பது குறித்து மத்திய சட்டம் மற்றும் நீதித் துறையுடன் கலந்து ஆலோசித்து வருவதாக தெரிவித்துள்ளார். கடந்த 14.6.2016 அன்று நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை புது டெல்லியில் சந்தித்து அளித்த கோரிக்கைகள் அடங்கிய மனுவில் மீண்டும் இந்தக் கோரிக்கையை வைத்துள்ளேன்.

காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு ஆகியவை அமைக்கப்பட வேண்டும் என உச்சநீதிமன்றத்தில் எனது தலைமையிலான அரசால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்றம் நீண்ட கால நிலுவையில் உள்ள வழக்குகளை விசாரிப்பதற்காக சிறப்பு அமர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. இவற்றில் காவேரி நதிநீர்ப் பிரச்சனையும் ஒன்றாகும். உச்சநீதிமன்றத்தின் சிறப்பு அமர்வின் முன் காவேரி பிரச்சனை சம்பந்தப்பட்ட வழக்குகள் 28.3.2016 அன்று விசாரணைக்கு வந்த போது உச்சநீதிமன்றம் இவ்வழக்குகளை 19.7.2016 அன்று பட்டியலிடும்படி ஆணையிட்டுள்ளது.

இவ்வழக்கு உச்சநீதிமன்றத்தில் வரும் பொழுது காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழுவை அமைக்க வலியுறுத்தப்படும். இதில் நாம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

சட்டம்-ஒழுங்கைப் பொறுத்த வரை தமிழகம் ஒரு அமைதிப் பூங்காவாக திகழ்ந்து வருகிறது. சட்டம்–ஒழுங்கை பாதிக்கச் செய்யும் நிகழ்வுகளிலும், குற்றத் தடுப்பு, புலனாய்வு, ஆகிய காவல் பணிகளிலும் காவல் துறையினருக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ள காரணத்தால் தமிழகத்தில் பொது அமைதி பாதுகாக்கப்படுகிறது. பொது அமைதிக்கு குந்தகம் ஏற்படா வண்ணம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் குற்ற நிகழ்வுகளே இல்லை என்ற நிலையை எய்திட இயலாது. மக்கள் தொகை அதிகரிப்பு வளர்ந்து வரும் பொருளாதாரம், தகவல் தொழில்நுட்ப முன்னேற்றம், மாறி வரும் சமுதாயச் சூழ்நிலை, மற்றும் நகரமயம் ஆதல், ஆகியவற்றால் குற்ற நிகழ்வுகள், ஒவ்வொரு ஆண்டும் அதிகரிக்கும் என்பது தான், உலகெங்கும் பொதுவான நடைமுறை என்றாலும், எனது தலைமையின் கீழ், காவல் துறையினரின் சிறப்பான பணிகளின் காரணமாக, தமிழ்நாட்டில், குற்ற நிகழ்வுகள் குறைந்து வருகின்றன.

2010 ஆம் ஆண்டு 1,715 என இருந்த கொலைகளின் எண்ணிக்கை, 2015 ஆம் ஆண்டு 1,641 என குறைந்துள்ளன. அது போலவே, ஆதாயக் கொலை வழக்குகள் 30.07 சதவீதமும், கொள்ளை வழக்குகள் 2.97 சதவீதமும், களவு வழக்குகள் 23.22 சதவீதமும், கொலை வழக்குகள் உள்ளிட்ட சொத்து சம்பந்தமான வழக்குகள் 13.60 சதவீதமும் குறைந்துள்ளன. குற்ற நிகழ்வுகளைப் பொறுத்தவரை குற்ற விகிதம் எவ்வளவு என கணக்கிடப்படுகிறது. ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு, எத்தனை குற்றங்கள் நடந்துள்ளன என்ற எண்ணிக்கை தான் குற்ற விகிதம் ஆகும். 2010 ஆம் ஆண்டு தாக்கல் ஆன இந்திய தண்டனைச் சட்ட, குற்றங்களின் குற்ற விகிதம் 277.08 என இருந்தது. 2015 ஆம் ஆண்டு, இந்த குற்ற விகிதம் எனது ஆட்சியில் 244.38 என குறைந்துள்ளது. எனவே, குற்றங்களின் எண்ணிக்கை எனப் பார்த்தாலும், குற்ற விகிதம் எனப் பார்த்தாலும், அன்றைய திமுக ஆட்சியுடன் ஒப்பிடும் போது இவை குறைந்தே உள்ளன.

தமிழகம் தொடர்ந்து அமைதிப் பூங்காவாக திகழ, அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1974-ஆம் ஆண்டு திரு. கருணாநிதி முதலமைச்சராக இருந்த போது கச்சத்தீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டது பற்றியும், அதனைத் தடுக்க திரு.கருணாநிதி தவறி விட்டது பற்றியும் விரிவாக நான் இந்த மாமன்றத்தில் 20.6.2016 அன்று எடுத்துக் கூறினேன்.

21.6.2016 அன்று திரு.கருணாநிதி ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் கச்சத் தீவை தாரை வார்க்க தான் எந்த காலத்திலும் ஒப்புக் கொண்டதும் இல்லை, உடன்பட்டதும் இல்லை என்று தெரிவித்துள்ளார். 2013-ஆம் ஆண்டு மே மாதம் டெசோ அமைப்பின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் இது தொடர்பாக மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக நான் கேட்கும் கேள்விகள் என்னவென்றால்,

1. 1974-ஆம் ஆண்டு ஜுன் 27-ம் தேதி திடீரென்று அறிவிப்பு வந்தவுடன் தான் அது பற்றி தெரியும் என்று சொன்னதும், 15.4.2013 அன்று டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் திமுக அரசு வலியுறுத்தி தான் சில ஷரத்துகள் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டன என்று கூறுவதும், ஒன்றுக்கொன்று முரண்பாடானதில்லையா? சில ஷரத்துகள் சேர்க்கும்படி சொல்லப்பட்டது என்றாலே, தாரை வார்க்க ஒப்புதல் அளிக்கப்பட்டது என்பது தானே பொருள்?

நான் இந்தக் கேள்விகளை திரு. கருணாநிதி அவர்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவர் பதில் சொல்லட்டும், நீங்கள் அமருங்கள். I am not yielding. அப்போதைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் சமாதானம் செய்து, பதில் சொல்ல முடியவில்லை என்றால், கூச்சல் போடுவதா? பதில் சொல்லமுடியவில்லை என்றால், கூச்சல் போடுவதால் என்ன ஆகப்போகிறது? உங்கள் தலைவர் பதில் சொல்லட்டும். உங்கள் தலைவர், தலைவர்தானா? அல்லது இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர்தான் உங்கள் தலைவரா? கூச்சல் போடுவதால் ஒன்றும் ஆகப்போவதில்லை. நான் கேட்கும் கேள்விகளைக் கேட்டே தீருவேன். எனக்குப் பேச அனுமதி தாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் யார் பேச வாய்ப்பு கேட்கிறார்கள்? அவர்களது தலைவர், தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி இந்த அவையின் உறுப்பினர். அவர் இங்கே வந்து பதில் சொல்லியிருக்கலாம். அதைவிட்டுவிட்டு வெளியே அறிக்கை கொடுத்துக்கொண்டிருக்கிறார். அந்த அறிக்கையைப் பற்றித்தான் நான் பேசிக்கொண்டிருக்கிறேன். உங்களால் முடியவில்லை என்றால் உட்காருங்கள். அறிக்கை கொடுத்தவரே இங்கே வந்து பதில் சொல்லட்டும். நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் சில நிமிடங்களில் எனது பதிலுரையை முடித்துவிடுவேன். அதன் பின்னர் அவர்கள் என்ன பேச விரும்பினாலும் தாங்கள் அனுமதிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டதட்ட 1 ½ மணிநேரம் இதுவரை எதிர்க்கட்சி தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அமைதியாக அமர்ந்து எனது உரையைக் கேட்டார்கள். ஆனால் கச்சத்தீவு என்று சொன்னவுடனே அவர்களால் பதில் சொல்ல முடியாது என்பது தெரியும். கச்சத்தீவைப் பற்றி சில கேள்விகளை நான் எழுப்ப விரும்புகிறேன் என்று சொன்னவுடன் ஓட்டம் பிடித்துவிட்டார்கள். இதைத்தான் எதிர்பார்த்தேன். பதில் சொல்ல முடியவில்லை என்றால், கச்சத்தீவை பற்றி நான் பேசினால், முதலில் கூச்சல் போட வேண்டியது, அதன் பின்னர் அந்த கூச்சலால் இங்கே எதையும் தடை செய்ய முடியவில்லை என்றதும், ஓட்டம் பிடிக்க வேண்டியது.

ஒன்றை நான் அனைவருக்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கச்சத்தீவு பிரச்சினை பற்றி கடந்த 20–ம் தேதி அன்று நான் இங்கே சில கருத்துகளைத் தெரிவித்தேன். அதற்கு தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி

அவர்கள் இந்த அவைக்கு வெளியே ஒரு அறிக்கை விட்டிருக்கிறார். 21–ம் தேதி அன்று தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் கச்சத்தீவைப் பற்றி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அனைவருக்கும் நான் நினைவுபடுத்த விரும்புவது திரு. மு. கருணாநிதி அவர்கள் இந்த அவையின் உறுப்பினர் ஆவார். சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் அவருக்கு இந்த அவைக்கு வருவதற்கு எல்லா உரிமையும் உண்டு.

அவர் இந்த அவைக்கு வந்திருக்கலாம்; அவருடைய கருத்துகளைத் தெரிவித்திருக்கலாம். நான் கேட்கும் கேள்விகளுக்கு அவரே இங்கே பதில் அளித்திருக்கலாம். ஆனால், அவர் இங்கே வராமல், வெளியில் இருந்துகொண்டு அறிக்கை விடுகிறார். திரு. கருணாநிதி விட்ட அறிக்கை தொடர்பாகத்தான் நான் பேசி கொண்டிருக்கிறேன். நான் கேட்கின்ற கேள்விகள் திரு. கருணாநிதி அவர்களைப் பார்த்துத்தான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அதற்குப் பதில் சொல்ல வக்கிருந்தால், இங்கே இருந்த தி.மு.க. உறுப்பினர்கள் அதற்குப் பதில் சொல்ல வேண்டும். பதில் சொல்ல வக்கில்லை என்றால், அவர்களுடைய தலைவரை இங்கே அழைத்து வரவேண்டும் இங்கே பதில் சொல்வதற்கு. அவர்களுக்குத் தலைவர் யார் என்ற குழப்பம் வேறு. அவர்களுடைய தலைவர் யார்? தி.மு.க.–வின் தலைவர் என்று குறிப்பிடுகின்ற திரு. கருணாநிதியா? அல்லது இங்கே அமர்ந்திருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவரா?

யார் தலைவர் என்பதிலேயே குழப்பம். அந்தத் தலைவர் திரு. கருணாநிதி, வேண்டுமென்றால் இந்த அவைக்கு வரலாம்; பதில் சொல்லலாம். இவர்களுக்கு கச்சத் தீவைப் பற்றி எதுவும் தெரியாது என்றால், பேசாமல் இருக்கலாம். எப்படி முதல் அறிக்கையை திரு. கருணாநிதி வெளியில் இருந்துகொண்டு விட்டாரோ, அதேபோலவே, இன்று நான் எழுப்பும் கேள்விகளுக்கும் திரு. கருணாநிதியே பதில் சொல்லட்டும் என்று விட்டுவிடலாம். ஆனால், அதற்கு மாறாக, கச்சத் தீவு என்று சொன்னவுடனேயே ஓட்டம் பிடித்துவிட்டார்கள். நான் கேட்க வேண்டிய கேள்விகளை இப்போது நான் கேட்டு முடிக்கிறேன்.

2. அப்போதைய பிரதமர் திருமதி இந்திராகாந்தி சமாதானம் செய்து பல உரிமைகளுக்கு வழி வகுக்கப்பட்டன என்று தனது அறிக்கையில் திரு.கருணாநிதி கூறியிருப்பதிலிருந்தே, கச்சத் தீவு தாரை வார்ப்பதற்கு அவர் ஒப்புக் கொண்டார் என்று தானே பொருள் ?

3. ஜன சங்கத் தலைவர் திரு.வாஜ்பாய் இது பற்றி வழக்குப் போடப்படும் என்று தெரிவித்தும், தமிழக அரசு ஏன் எந்த வழக்கையும் அப்போது தாக்கல் செய்யவில்லை ?

4. 2008-ஆம் ஆண்டு தனிப்பட்ட முறையில் உச்சநீதிமன்றத்தில் நான் வழக்கு தாக்கல் செய்து, அதன் பின்னர், 2011-ஆம் ஆண்டு, என்னால் சட்டப் பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் தமிழக அரசும் அதில் தன்னை இணைத்துக் கொண்ட பின், தி.மு.க.வால் அரசியல் காரணங்கள் மற்றும் 2014-ஆம் ஆண்டைய நாடாளுமன்றத் தேர்தலை மனதில் வைத்து தானே 10.5.2013 அன்று உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது?

5. என்னால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் பேரில், உச்சநீதிமன்றம் தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்பிய போது, திரு.கருணாநிதியின் தலைமையிலான அப்போதைய தமிழக அரசு ஏன் கச்சத் தீவை தாரை வார்த்தது தவறு என பதில் மனு தாக்கல் செய்யவில்லை?

6. அப்போதைய திமுக அரசு வலியுறுத்தியதால் தான் கச்சத் தீவுப் பகுதியில் மீன் பிடிக்கும் உரிமை, மீனவர்களின் வலைகளை அங்கே உலர்த்திக் கொள்வதற்கான உரிமை, 1974-ஆம் ஆண்டு ஒப்பந்த ஷரத்துகளில் சேர்க்கப்பட்டன என்பது உண்மைக்கு மாறான கருத்தல்லவா? ஏனெனில், இது போன்ற எந்த ஷரத்தும் 1974-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் இல்லையே ?

இவற்றுக்கெல்லாம் திமுக தலைவர் திரு. கருணாநிதி பதில் கூறுவாரா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !

விவாதத்தின் போது மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய வினாக்களுக்கு தேவையான விளக்கங்களை நானும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அவ்வப்போது அளித்துள்ளோம்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் நேற்று விவாதத்தில் பங்கேற்று பேசும் போது, அண்மைக் காலமாக அடுத்தடுத்து நடக்கக் கூடிய கொலைகள், கொள்ளைகள், கூலிப்படையினருடைய அட்டகாசம் ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்றும், கூலிப்படையினுடைய நடமாட்டத்தை கட்டுப்படுத்த முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது என்றும்; உண்மைக்கு மாறான ஒரு குற்றச்சாட்டை சொல்லியுள்ளார்.

குற்றங்களின் எண்ணிக்கை குறைந்து வருவது பற்றி நான் சற்று முன் தெரிவித்துள்ளேன்.

கொலை சம்பவங்கள் குறித்து நாளேடுகளில் செய்திகள் வெளியாகும் போது, பொதுவாக அவை கூலிப்படையினரால் நடைபெற்றதாக செய்திகள் வெளி வருகின்றன. ஆனால், உண்மை நிலை என்னவெனில், பெரும்பாலான சம்பவங்களில் கொலையுண்டவர்களின் எதிரிகள், உறவினர்கள், கூட்டாளிகள் அல்லது நண்பர்கள் ஆகியோரே இச்செயலில் ஈடுபடுகின்றனர். மேலும், இரு தரப்பினரிடையே முன் விரோதம் காரணமாக, பழிக்கு பழியாக மாறி மாறி கொலைகள் நடக்கும் போது அச்சம்பவங்களில் இரு தரப்பினருக்கும் வேண்டியவர்களே சம்பந்தப்படுகிறார்கள். ஆனால் அது போன்ற சம்பவங்களிலும் கூலிப்படையினர் ஈடுபட்டதாக செய்திகள் வெளி வருகின்றன.

அண்மையில் நடைபெற்ற சில கொலை சம்பவங்களில் கூலிப்படைகள் ஈடுபட்டதாக நாளேடுகளில் செய்திகள் வெளி வந்துள்ள போதும் உண்மையில் அச்சம்பவங்களில் கூலிப்படையினர் ஈடுபடவில்லை. எனவே, கூலிப்படையின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த முடியாத நிலை இருப்பதாக எதிர்க்கட்சி தலைவர் கூறியுள்ளதில் எள்ளளவும் உண்மையில்லை. கூலிப்படையினரை அறவே ஒழிக்க, தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் காவல் துறையினர் எடுத்து வருகின்றனர்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசும் போது, சில மளிகைப் பொருட்களின் தற்போதைய விலையை 2011-ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டு விலைவாசி உயர்ந்துள்ளது என்றும், அதற்கு இந்த அரசு தான் காரணம் என்பது போலவும் தெரிவித்தார்.

அகில இந்திய அளவில் பொருட்களின் தேவை மற்றும் அவை கிடைக்கும் அளவு, பெட்ரோல், டீசல் போன்ற பொருட்களின் விலை என பல்வேறு காரணங்களால் விலை உயர்வு ஏற்படுகிறது. இந்த கொள்கைகளில் எதையுமே மாநில அரசு நிர்ணயம் செய்ய இயலாது. இந்த கொள்கைகளை எல்லாம் வகுப்பது மத்திய அரசு தான். எனவே தான், விலைவாசி என்பது அகில இந்திய அளவிலும் கிட்டதட்ட ஒரே அளவாகத் தான் இருக்கிறது. ஆனாலும் விலைவாசி ஏற்றத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கக் கூடிய வகையில் மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்த முடியும். அது போன்ற திட்டங்கள் இங்கே தமிழ்நாட்டில் எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருவதால் தான், விலைவாசியின் தாக்கம் ஏழை, எளிய, நடுத்தர மக்களை பாதிக்காமல் இருக்கிறது.

உர விலையை ஏற்றியது திமுக அங்கம் வகித்த முந்தைய மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு தான். இதற்கு அமைச்சரவையில் ஆதரவு தெரிவித்தது திமுகவைச் சேர்ந்த மத்திய அமைச்சர் தான். ஆனால், இதில் மாநில அரசு என்ன செய்ய முடியும் என்பதை யோசித்து எனது தலைமையிலான அரசு உரத்தின் மீதான மதிப்பு கூட்டு வரியை முழுவதுமாக ரத்து செய்தது. சமையல் எரிவாயுவிற்கான விலையை திமுக அங்கம் வகித்த முந்தைய மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு தான் உயர்த்தி வந்தது. இதை மாநில அரசால் கட்டுப்படுத்த இயலாது. ஆனால், எனது தலைமையிலான அரசு எரிவாயு சிலிண்டர் மீதான மதிப்பு கூட்டு வரியை முழுவதும் ரத்து செய்தது. பெட்ரோல், டீசல் ஆகிய பொருட்களின் விலை உயர்ந்தால் போக்குவரத்து செலவு அதிகமாகும். அதன் காரணமாக பொருட்களின் விலை உயரும். பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவற்றுக்கான விலையை எண்ணெய் நிறுவனங்கள் 15 நாட்களுக்கு ஒரு முறை, நிர்ணயித்துக் கொள்ளலாம் என்று முடிவு எடுத்தது திமுக அங்கம் வகித்த முந்தைய மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு. பெட்ரோல், டீசல் விலை நிர்ணயத்தின் தவறான கொள்கையைத் தான் தற்போதைய மத்திய பாரதிய ஜனதா அரசும் கடைபிடிக்கிறது.

பெட்ரோல், டீசல் விலை குறைந்தாலும், மத்திய கலால் வரியை உயர்த்தி விட்டது தற்போதைய மத்திய பாரதிய ஜனதா அரசு. டீசலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 13 ரூபாய் 57 காசு எனவும் பெட்ரோலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 11 ரூபாய் 77 காசு எனவும் மத்திய கலால் வரி உயர்த்தப்பட்டுள்ளது. பல மாநில அரசுகளும் தங்கள் மாநிலத்தில் விற்பனை வரியை, உயர்த்தியுள்ளன. ஆனால், எனது தலைமையிலான அரசு விற்பனை வரியை உயர்த்தவே இல்லை.

அதே போல, டீசல் விலை உயர்வு காரணமாக பேருந்து கட்டணங்களை எனது தலைமையிலான அரசு உயர்த்தாமல் போக்குவரத்துக் கழகங்களுக்கு டீசல் மானியமாக 1,556 கோடி ரூபாயை வழங்கியுள்ளது.

இது போன்ற நடவடிக்கைகள் மட்டும் அல்லாமல், விலைவாசி உயர்விலிருந்து பொதுமக்களை காக்கும் பல்வேறு நலத் திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. அந்த திட்டங்களைப் பற்றி மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் நேற்று விரிவாக எடுத்துச் சொல்லியுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !

மாண்புமிகு உறுப்பினர் திரு.எச்.வசந்தகுமார் அவர்கள் பேசும் போது திருட்டு விசிடிக்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்தைச் சொல்லியுள்ளார். காணொலி திருட்டைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை காவல் துறை முனைப்புடன் எடுத்து வருகிறது.

காணொலி திருட்டைக் கட்டுப்படுத்தவும், பதிப்புரிமை சட்ட மீறலைக் கண்காணிக்கவும் எனது முதல் ஆட்சிக் காலத்திலேயே, 1995-ஆம் ஆண்டு, காணொலி திருட்டு தடுப்புப் பிரிவு என்ற ஒரு தனிப் பிரிவு எனது தலைமையிலான அரசால் தொடங்கப்பட்டது. தற்போது 12 இடங்களில் இப்பிரிவுகள் உள்ளன.

குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் காணொலி திருட்டுக் குற்றம் 2004-ஆம் ஆண்டு எனது தலைமையிலான அரசால் சேர்க்கப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில், காணொலி திருட்டு தடுப்புப் பிரிவால் 13,784 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 13,446 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 108.72 கோடி ரூபாய் மதிப்பிலான திருட்டு குறுந்தகடுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 52 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

என்னுடைய இந்தப் பதிலுரை, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, திருப்தி அளித்திருக்கும் என, நான் நம்புகிறேன். எனது இந்தப் பதிலுரையை, ஏற்றுக் கொண்டு, மேதகு ஆளுநர் உரைக்கு, நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது, கொடுத்த திருத்தங்களை, உறுப்பினர்கள் திரும்பப் பெற வேண்டும், என்று கேட்டுக் கொள்வதோடு; தீர்மானத்தை, ஒருமனதாக, நிறைவேற்றித் தருமாறு, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரையும், கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

நன்றி, வணக்கம்.

*******